2014 பிப்ரவரி 18]

பொற்கரங்களால் திறக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) 69 பாலப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைக்கேற்ப அந்தப் பாலத்தை அகலப்படுத்துவதற்குண்டான நடவடிக்கையை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

பகுதி நேர நியாய விலைக் கடை

***2905—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பனஹள்ளி தொகுதி, கட்டாயமேடு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், சின்னபுத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பாஹனபள்ளி முழுநேர நியாய விலைக் கடையானது 431 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. இதில் 102 குடும்ப அட்டைகளுடன் கட்டாயமேடு கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடையை துவக்கினால், தாய் கடையில் 329 குடும்ப அட்டைகளே மீதமிருக்கும். எனவே, இந்தக் கிராமத்தில் பகுதி நேர நியாய விலைக் கடை தற்போது

திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, ஒக்கூர் ஊராட்சி, கடம்பங்குடி கிராமத்தில், ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை திறப்பதற்கான கருத்துரு மாவட்ட வழங்கல் அலுவலர்மூலம் அனுப்பப்பட்டு ஓராண்டு காலம் ஆகிறது. கடம்பங்குடிக்கும் ஒக்கூருக்கும் இடையே 6 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதனால், கடம்பங்குடி கிராமத்திலிருக்கிற மக்கள் ஒக்கூருக்குச் சென்று பொருட்கள் வாங்குவதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். கட்டடம் கட்டுவதற்கு O.N.G.C. நிறுவனம் 4 இலட்சம் ரூபாய் நிதியுதவி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. அதேமாதிரி, கட்டடம் கட்டுவதற்குத் தேவையான இடமும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத்தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, பாளையம் ஒன்றியம், ரெட்டியார்பட்டி ஊராட்சி, ரெட்டியார்பட்டி கிராமத்தில் 5,500*

2014 பிப்ரவரி 18]

மக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள மக்கள் அனைவரும் நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இங்குள்ள நியாய விலைக் கடையில் 1,500 குடும்ப அட்டைகள் உள்ளன. மக்கள் நீண்டநேரம் வரிசையில் நிற்க வேண்டியுள்ளதால், அங்கே பகுதி நேர கடையை அமைத்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக கேட்டு அமருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் முழுமையாகப் பூர்த்தியாகும் நிலையில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே அதற்கேற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே இதுசம்பந்தப்பட்ட கருத்தைக் கேட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

71—

மேய்ச்சல் நிலம்

***8838 திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, மேச்சேரியிலுள்ள செம்மறியாட்டு ஆராய்ச்சி நிலையத்திற்குக் கூடுதலாக மேய்ச்சல் நிலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS